OS 210/2019

வா.சா. 1 கோவிந்தராஜ் த/பெ பூவாத்த கவுண்டர்

நாள் 12.02.2025

**குறுக்கு விசாரணை**

1. 1ம் பிரதிவாதி என் தம்பி ஆவார். 2ம் பிரதிவாதி என் அக்கா ஆவார். 3ம் பிரதிவாதி என் தங்கை ஆவார். 2ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதி எனக்கும் எந்தவிதமான தகராறு இல்லை என்றால் சரிதான்.

2. என் அப்பா பெயர் பூவாத்த கவுண்டர் ஆவார். என் அப்பா 30.01.2000 ல் இறந்தார். என் அப்பாவின் இறப்பு சான்று இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் அப்பாவின் வாரிசு சான்று இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தாத்தா பெயர் பாலயா கவுண்டர். என் தாத்தா பாலயா கவுண்டர் பெயரில் சொத்து எதுவும் இருந்ததாகவும் அவருக்கு பிறகு அந்த சொத்துக்கள் என் அப்பாவிற்கு வந்தது என்பது குறித்தும் ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை.

3. தாவா சொத்தில் 1 முதல் 5 அயிட்ட சொத்துகள் பட்டா எண்.623 சம்மந்தப்பட்டது என்றும் தாவா சொத்து 6 முதல் 9 அயிட்ட சொத்துகள் பட்டா எண்620 சம்மந்தப்பட்டது என்றும் தாவா 10 முதல் 15 அயிட்ட சொத்துகள் பட்டா எண்.772 சம்மந்தப்பட்டது என்றும் தாவா 16 முதல் 20 அயிட்ட சொத்துககள் பட்டா எண்1500 சம்மந்தப்பட்டது என்றும் காட்டுவதற்கு் மேற்படி பட்டாக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

4. தாவா சொத்தின் 1 முல் 20 அயிட்ட சொத்துகள் என் அப்பா பெயரில் இருந்தது என்று காட்டுவதற்கான பட்டா எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த தாவா முதன் முதலில் தாக்கல் செய்யப்பட்ட போது 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தாவாவில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பதிலுரை தாக்கல் செய்து 2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் இந்த வழக்கின் அவசிய தரப்பினர்கள் என்று சொன்ன பிறகு தான் 2மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரிதான்.

5. நான் தாக்கல் செய்துள்ள IA.2/2023 மனுவில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண வாக்குமூலத்தில் என் சகோதரிகள் என்னுடன் வழக்கு நடத்த விரும்பவில்லை என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 2மற்றும் 3ம் பிரதிவாதிகளை தாவா தாக்கல் செய்வதற்கு அழைத்தேனா என்றால் அழைத்தேன் அதற்கு அவர்கள் என்னுடன் சேர்ந்து தாவா தாக்கல் செய்ய வரமுடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

6. 2மற்றும் 3ம் பிரதிவாதிகள் இந்த தாவாவில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்ட பிறகு அவர்கள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு தங்களுக்கும் தாவா சொத்தில் பாகம் உள்ளது என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான்.

7. என் அப்பா சொத்தாக இருந்தால் அந்த சொத்தில் எனக்கும் பிரதிவாதிகள் மூவருக்கும் சேர்த்து மொத்தம் 4 பாகங்கள் உள்ளது என்றால் சரிதான். ஆனால் இந்த தாவாவில் 1/2 பாகம் கோரி தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரிதான்.

8. பட்டா எண்.623 மற்றும் 620 யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.623ற்கான கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட சிட்டா 24.09.2018 தேதியிட்டது **பி.வா.சா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.620ற்கான கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட சிட்டா 06.04.2019 தேதியிட்டது **பி.வா.சா.ஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதேபோல் பட்டா நம்பர்1500

என் பெயரிலும் பிரதிவாதிகள் மூவர் பெயரிலும் சேர்ந்து உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.1500ற்கான கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட சிட்டா 17.01.2018 தேதியிட்டது **பி.வா.சா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. பட்டா எண்.623 மற்றும் பட்டா எண்.620 நான் குடும்பத்தில் மூத்த மகன் என்பதால் அந்த பட்டா என் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து 1 முதல் 9, 16 முதல் 20 அயிட்ட சொத்துகள் நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார். 1ம் பிரதிவாதி அந்த சொத்துகளை நான் அனுபவிப்பதை தடை செய்கிறார் என்பது குறித்து வழக்கறிஞர் அறிவிப்பு அல்லது காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. தாவா சொத்துகளை 1ம் பிரதிவாதி என்னை அனுபவிக்க அனுமதிக்கவில்லை என்பது குறித்து தாவாவில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

10. தாவா சொத்துகள் குறித்த அடங்கல் பெறப்பட்டால் தாவா சொத்துகளை நான் தான் அனுபவித்து வருகிறேன் என்பது தெரியவரும் என்றால் சரிதான். அதனால் தான் தாவா சொத்துகள் சம்மந்தப்பட்ட பட்டாக்கள் மற்றும் அடங்கல் ஆகியவை தாக்கல் செய்யாமல் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)